Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

THURSDAY, MAY 09, 2024

வியாழக்கிழமை மே 09, 2024 | ஒளி: 09 கதிர் 248 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# தடுப்பூசியை மீள பெறும் அஸ்ட்ராசெனெகா

பிரிட்டிஷ் மருந்து நிறுவனம் அஸ்ராசெனக்கா (AstraZeneca) தடுப்பூசி ஏற்றுதலானது அரிதான பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்று ஒப்புக்கொண்டதாக அறிவிக்கப்பட்ட சில நாட்களுக்குப் பின் அஸ்ட்ராசெனெகா அதன் COVID-19 தடுப்பூசியை உலகளாவிய ரீதியில் திரும்பப் பெறத் தொடங்கியுள்ளது.

அஸ்ட்ராசெனெகா மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட இந்த தடுப்பூசி, கோவிஷீல்டாக இந்தியாவின் சீரம் இன்ஸ்டிடியூட் மூலம் தயாரிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



# முஜிபுர் உள்ளே

சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சரான டயானா கமகே, பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து உயர் நீதிமன்ற தீர்ப்பையடுத்து, பதவி நீக்கப்பட்டார்.

அதனால் வெற்றிடமான பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.


அத்துடன், இந்த முன்மொழிவு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். இதனையடுத்து, தேர்தல்கள் ஆணைக்குழு

தொடர்ச்சி P2

## இரட்டை பிரஜாவுரிமையால்

# டயானா வெளியே



பாராளுமன்றத்திலும் வெளியேயும் அவ்வப்போது சர்ச்சைக்குரிய உரையை ஆற்றும் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பாராளுமன்ற உறுப்பினராக தொடர்ந்தும் செயற்படுவதை தடுக்கும் வகையில் உயர் நீதிமன்றம் ரிட் கட்டளையை புதன்கிழமை (08) பிறப்பித்துள்ளது.

தொடர்ச்சி P2



# "ஐ.ம.ச. எம்.பிக்களுக்கு பிரச்சினை வரலாம்"

நாட்டின் பிரஜை அல்லாத டயனா கமகேமவினால் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சட்டப்பூர்வமானதா? என்ற கேள்விகள் எழுகிறது என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலின் போது, அக்கட்சியின் வேட்பு மனுவில் அவர் கையெழுத்திட்டிருந்தாலோ, தற்போதைய கட்சி செயலாளருடன் அவர் உடன்படிக்கையைச் செய்திருந்தாலோ அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடலாம் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# மொட்டு இன்று திறப்பு



எதிர்வரும் தேர்தலுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் செயற்பாட்டு அலுவலகம் திறக்கப்படவுள்ளது.

கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, பத்தரமுல்லையில் இந்த செயற்பாட்டு அலுவலகத்தை வியாழக்கிழமை (09) திறந்து வைக்கவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்கு தொகுதி மட்டத்தில் கட்சியை தயார்படுத்தும் வகையில், இந்த செயற்பாட்டு அலுவலகத்தை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தலுக்கான இறுதித் தீர்மானத்தை பொதுஜன பெரமுன இன்னும் எடுக்கவில்லை.

# "பெரும் சுதந்திரம் கிடைத்ததை போன்றது"



டயனா கமகேவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல் போனமை பாராளுமன்றத்திற்கும் சபாநாயகருக்கும் பெரும் சுதந்திரம் கிடைத்ததை போன்றது என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் கூறுகையில்,

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த டயனா கமகே தொடர்பான இரட்டைக் குடியுரிமை தொடர்பான வழக்கில் உயர் நீதிமன்றத்தினால் முக்கிய தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி அவர் இன்று முதல் பாராளுமன்ற உறுப்பினர் அல்ல. இதன்மூலம் இந்த பாராளுமன்றத்திற்கு பெரும் சுதந்திரம் கிடைத்துள்ளது என்பதுடன், சபாநாயகருக்கும் பெரும் சுதந்திரம் கிடைத்துள்ளது என்பதனை கூறுகின்றோம் என்றார்.



# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்திற்காக பொது சட்டம்

சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றத்திற்காக ஒரேயொரு பொதுச் சட்டம் கொண்டுவரப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும் போது, ஏற்றுமதி சார்ந்த போட்டிப் பொருளாதாரம் மட்டுமன்றி, 2050ஆம் ஆண்டளவில் பூஜ்ஜிய உமிழ்வை அடையும் பசுமைப் பொருளாதாரமாக மாற்றியமைப்பதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# சபையை குழப்பிய மூன்றெழுத்து வேட்பாளர்

## பெற்றோல் விவகாரத்தால் அம்பலமானார்



பாராளுமன்றத்தில் புதன்கிழமை(08) இடம்பெற்ற விவாதத்தின் போது, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மூன்றெழுத்து ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் சுவாரசியமான சம்பாஷனை இடம்பெற்றது.

தனியார் நிறுவனங்களுக்கு எரிபொருளைக் கடனுக்கு விற்பனை செய்வது தொடர்பில் அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பி

தொடர்ச்சி P2

# அதானி குழுமத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

## அருட்தந்தை சந்தியோகு மாக்கஸ் அடிகளார் அறிவிப்பு

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் தீவில் அதானி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள 52 காற்றாலை உயர் மின் திட்டத்திற்கு இலங்கை அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை சந்தியோகு மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் புதன்கிழமை (8) இடம்பெற்ற ஊடக



சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# "ஒரு விமானம் கூட சொந்தமாக இல்லை"

இலங்கை மட்டுமன்றி, உலகில் செல்வந்த நாடுகளில் கூட விமானச் சேவைகள் நஷ்டத்திலேயே இயங்குகின்றன. சில நாடுகள் அந்த நிறுவனங்களுக்கு பில்லியன் கணக்கில் நிதி வழங்குகின்றன ஆனால் இலங்கையால் அவ்வாறு செய்ய முடியாது என்று தெரிவித்த அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா இலங்கைக்கு ஒரு விமானம் கூட சொந்தமாக இல்லை என்றார்.

அத்துடன் விமான சேவை ஊழியர்கள் 470 பேர் ஒரே தடவையில் தமது பதவியை இராஜிநாமா செய்ததாலேயே 791 பேரைப் புதிதாக இணைத்துக் கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டது எனவும் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்ற பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தின் போது, எதிர்க்கட்சி எம்.பியான ஹேஷா விதானகே எழுப்பிய கேள்வியொன்றுக்கு பிரதமரின் சார்பில் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2



# "திறந்த, சுற்றுலா விசாவில் செல்லாதீர்கள்"

சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்குச் சென்று நெருக்கடிக்கு உள்ளானால் இராஜதந்திர மட்டத்தில் ஒத்துழைப்பு வழங்க முடியாது எனத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, திறந்த விசா, சுற்றுலா விசா ஊடாக வெளிநாடுகளுக்குத் தொழில் வாய்ப்புகளுக்காகச் செல்வதை இளைஞர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார்

பாராளுமனத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்ற இராஜதந்திர சிறப்புரிமை சட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

# 13,347 மில்லியன் ரூபாய் நிலுவையில் உள்ளது



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு, அரச நிறுவனங்கள் உட்பட தனியார் நிறுவனம் 13,347 மில்லியன் ரூபாய் நிலுவைத் தொகையை செலுத்த

தொடர்ச்சி P2

# புதிய நல்லிணக்க குழு தேர்தலை நோக்கியதா?



நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று புதிதாக மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றது இதனை முற்று முழுதாக நாம் எதிர்க்கின்றோம் எனத் தெரிவித்த தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், வன்னி மாவட்ட எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன் இது தேர்தலை நோக்கியதா என்ற கேள்வி எழுகின்றது என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்ற இராஜதந்திர சிறப்புரிமை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை அமைக்க வெளிவிவகார அமைச்சர் எடுக்கும் முயற்சி சரியாக இருக்குமா என்ற விடயம் ஒருபுறம் இருந்தாலும் அதனை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. .சண்டையிட்ட தரப்பே அது தொடர்பிலான விசாரணைகள் நடத்துவதனை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம். சர்வதேச

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தடுப்பூசியை மீள பெறும் அஸ்ட்ராசெனெகா

COVID-19க்கான புதுப்பிக்கப்பட்ட தடுப்பூசிகளின் மிகுதியினால் வணிக காரணங்களுக்காக உலகளாவிய திரும்பப் பெறுதல் தொடங்கப்பட்டதாகத் தடுப்பூசி தயாரிப்பாளர் கூறியுள்ளார். புதிய மாறுபாடுகளைச் சமாளிக்கும் புதுப்பிக்கப்பட்ட தடுப்பூசிகளால் அஸ்ராசெனக்கா முறியடிக்கப்பட்டது என அஸ்ட்ராசெனக்கா தெரிவிக்கிறது.

குறித்த தடுப்பூசி இனிமேல் தயாரிக்கப்படப் போவதில்லை மற்றும் இனிமேல் அதனைப் பயன்படுத்த முடியாது என்பவற்றைக் காரணங்காட்டி நிறுவனம் தானாக முன்வந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் அதன் சந்தைப்படுத்தல் அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளது.

தடுப்பூசியைப் பயன்படுத்தி வரும் பிற நாடுகளிலும் இதே போன்று தடுப்பூசிகள் திரும்பப் பெறப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அதானி குழுமத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

மன்னார் தீவில் மீண்டும் முன்னெடுக்கப்படவுள்ள குறித்த திட்டத்தினால் எமக்கு வர உள்ள அழிவுகள் குறித்து நாங்கள் பல வருடங்களாகக் கூறி வருகிறோம். குறித்த திட்டத்தினால் எமது வாழ்விடம் திட்டமிட்டுப் பறிக்கப்பட உள்ளது.

எமது பண்பாடு மற்றும் வரலாற்றுச் சுவடுகள் அழிக்கப்படப் போகின்றது. மக்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு மக்கள் வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்படப் போகிறது. மாணவர்களின் கல்வி மற்றும் அவர்களின் எதிர்கால நல வாழ்வும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும் என்றார்.

எமது வளமான மண் அழிக்கப்பட்டு, எதுவும் அற்ற ஒரு நிலைக்குத் தள்ளப்படும்.

எனவே, எமது மக்களை ஒன்று கூட்டி பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்விடயம் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்று அவரது முடிவை நாங்கள் எதிர் பார்க்க உள்ளோம். மன்னார் தீவில் உள்ள மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி நல்லதொரு தீர்வை வழங்குவாராக இருந்தால் எதிர்ப்பு போராட்டங்கள் கைவிடப்படும்.

எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது விட்டால் எமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். மன்னார் தீவில் இருந்து ஒரு துண்டு நிலத்தைக் கூட நாங்கள் இத் திட்டங்களுக்கு வழங்க மாட்டோம் என்றார்.

# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்திற்காக பொது சட்டம்

கடந்த சில நாட்களாக இலங்கை எதிர்நோக்கும் கடும் வெப்பமானது எதிர்கால காலநிலை மாற்றத்தின் அடையாளம் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, காலநிலை மாற்றத்தைத் தணிக்க உடனடி கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை (07) ஆரம்பமான இலங்கை காலநிலை மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

# புதிய நல்லிணக்க குழு தேர்தலை நோக்கியதா?




கண்காணிப்போடு இந்த விசாரணைகள் நடைபெற வேண்டும். இதனை நாம் ஏற்கனவே வலியுறுத்தியிருக்கின்றோம். அதனை அமைச்சர் கவனத்தில் எடுக்க வேண்டும். அப்போதுதான் ஒரு நியாயம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும் என்றார். .

அந்த வகையில், இந்த நல்லிணக்க ஆணைக்குழுவில் சர்வதேச கண்காணிப்பு இருக்க வேண்டும். அப்படி இருக்கின்றபோதுதான் எங்களுக்கு நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை வரும். கடந்த காலங்களில் நல்லிணக்க ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்ட நிலையில், அவற்றை நம்பி எமது மக்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். இரகசியங்களைச் சொன்னார்கள். ஆனால், ஆணைக் குழுக்கள் கலைந்து போவதே இடம்பெற்று வந்தது.

இப்போது மீண்டும் புதிதாக நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று ஆரம்பிக்கப்படுகின்றது. இதனை முற்று முழுதாக நாம் எதிர்க்கின்றோம். இந்த நேரத்தில் நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்படுவது தேர்தலை நோக்கியதா என்ற கேள்வி எழுகின்றது. இந்த ஆணைக்குழுவில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் இல்லையென்றால் இது கானல் நீராகவே இருக்கும் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இருக்கவே இருக்காது என்றார்.

# டயானா வெளியே

நீதியரசர்களான காமினி அமரசேகர, குமுதுனி விக்ரமசிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம், இந்த வரலாற்றுத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

சமூக செயற்பாட்டாளரான ஓஷல லக்மால் ஹேரத், இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் பிரித்தானிய பிரஜாவுரிமை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எழுத்தாணை மனு மீதான விசாரணையின் பின்னர் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தீர்ப்பு வழங்கப்பட்டது.

அந்த தீர்ப்பை ஆட்சேபனைக்குட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு தொடர்பான விசாரணையை நிறைவு செய்த உயர் நீதிமன்றம் இந்த தீர்ப்பை புதன்கிழமை (08) வழங்கியது.

மேற்படி, மனுமீதான விசாரணையை பெப்ரவரி 13ஆம் திகதி நிறைவுக்குக் கொண்டுவந்த நீதியரசர்கள் குழாம் அமர்வு அதன் தீர்ப்பைக் காலவரையின்றி ஒத்திவைக்கத் தீர்மானித்தது.



இந்த நிலையில், டயானா கமகே பாராளுமன்ற உறுப்பினர் பதவி மற்றும் பிரஜாவுரிமைக்கு எதிராகத் தாக்கல் செய்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட இரண்டு வாரங்களின் பின்னர் சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் இந்த மேன்முறையீட்டு மனுக்களை முன்வைத்திருந்தார்.

ஹேரத் தனது மேன்முறையீட்டின் பிரதிவாதிகளாக டயானா கமகே உள்ளிட்ட சிலரைக் குறிப்பிட்டிருந்தார்.

எனவே, டயானா கமகே இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுள்ளதால், இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என தீர்ப்பு வழங்குமாறு ஹேரத் தனது மனுவில் கோரியிருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்குள் காலடி எடுத்துவைத்து, பின்னர்

அரசாங்கத்துக்கு ஆதரவளித்து இராஜாங்க அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டார் டயானா.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிப்பதற்கு அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டம் ஊடாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



# முஜிபுர் உள்ளே

வர்த்தமான அறிவித்தலை வெளியிடும். அதன்பின்னர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான முஜிபுர் ரஹ்மான், பாராளுமன்றத்தில் எம்.பியாக சத்தியப்பிமாணம் செய்துகொள்வார்.

அதற்கு முன்னதாக, பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால், பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடம் குறித்து, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கவேண்டும்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான முஜிபுர் ரஹ்மான், உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கொழும்பு மாநகர சபையின் மேயர் வேட்பாளராகக் களமிறங்குவதற்காக, தன்னுடைய எம்.பி. பதவியை இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சபையை குழப்பிய மூன்றெழுத்து வேட்பாளர்

தயாசிறி ஜயசேகர, பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் வர்த்தகர் ஒருவரின் நிறுவனத்திற்கும் இவ்வாறு விற்பனை செய்யப்படுவதாகக் குறிப்பிட்டார்.

தனியார் நிறுவனங்களிடமிருந்து பணத்தைச் செலுத்தி அதிக விலைக்கு மின்சாரத்தைக் கொள்வனவு செய்துகொண்டு பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து கடனுக்கு எரிபொருளைக் கொள்வனவு செய்து கடனுக்குத் தனியார் நிறுவனங்களுக்குக் கொடுக்கும் அரசாங்கமே இருக்கின்றது. இவ்வாறு செய்தால் நாட்டை கொண்டு செல்ல முடியுமா? வர்த்தகர் ஒருவர் இருக்கின்றார் அவருக்கு விமான நிலையத்தில் இடமொன்று வழங்கப்பட்டுள்ளது என்றார்.

விமானங்களுக்கு எரிபொருளை விற்பதற்காக இடமளிக்கப்பட்டுள்ளது. அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவரே என்றார்.

இதன்போது அவ்வாறான நபரின் பெயரைக் கூறுங்கள் என்று ஆளும் தரப்பிலிருந்து சிலர் கேட்டனர்.

இதன்போது பதிலளித்த தயாசிறி ஜயசேகர, அந்தப் பெயர் உங்களுக்கு தெரியும் தானே. உங்களின் ஜனாதிபதி வேட்பாளர் என்றே கூறுகின்றனர் என்றார்.

இவ்வேளையில், எழுந்த சபை முதல்வரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அனைத்து எம்.பிக்களுக்காகவும் சபையில் நான் கதைக்க வேண்டியுள்ளது. இதனால் நீங்கள் கூறும் நபர் வர்த்தகரா?, அவர் இன்னும் ஜனாதிபதி வேட்பாளர் என்ற நிலையில் இருக்கின்றரா? என்று கேட்டார்.

இதன்போது மீண்டும் கருத்து வெளியிட்ட தயாசிறி ஜயசேகர, உங்களின் கட்சியில் மூன்றெழுத்து பெயர் கொண்டவரே ஜனாதிபதி வேட்பாளர் என்று கூறுகின்றனர். அவர் சுசில் என்று கூறவில்லை என்றார்.

இவ்வேளையில் மீண்டும் கூறிய சுசில் பிரேமஜயந்த, எனது பெயரைக் கூறவில்லையே. நான் வர்த்தகரும் இல்லை, நான் அண்மையில் வந்தவரும் இல்லை தேசியப் பட்டியலில் வந்தவரும் இல்லை இதனால் எனக்குப் பொருந்தாது என்றார்.

# "திறந்த, சுற்றுலா விசாவில் செல்லாதீர்கள்"

மியன்மார் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ள இலங்கையர்கள் அங்கு பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். இவ்விடயம் தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது

சட்டவிரோதமான முறையில் மியன்மார் சென்ற இலங்கையர்கள் கூலிப்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். மியன்மார் நாட்டில் மியாவாடி பகுதி அரச கட்டுப்பாட்டில் இல்லை .அங்கு இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு மியன்மார் அரசாங்கத்துடன் இராஜதந்திர மட்டத்திலும், இராஜதந்திரத்துக்கு அப்பாற்பட்ட வகையிலும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தோம். இதற்கமைய மூன்று குழுவினர் தாய்லாந்து எல்லைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள்.

மியாவாடி பகுதியில் மேலும் 49 இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் என்றார்.

இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புக்களுக்காகத் திறந்த விசா, சுற்றுலா விசா ஊடாக வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் ஊடாக தொழில் வாய்ப்புகளுக்குச் செல்ல வேண்டும்.

சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்குச் சென்று அங்குப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும்போது, இராஜதந்திர மட்டத்தில் எவ்வித நடவடிக்கைகளையும் எம்மால் முன்னெடுக்க முடியாது. மனிதாபிமான அடிப்படையில் மாத்திரமே நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

ரஷ்யாவின் இராணுவ படையில் இணைந்துள்ள இலங்கையர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையில் இவர்கள் சட்டவிரோதமான முறையில் சென்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

ரஷ்யாவின் ஊழிப்படையாக செயற்படும் இளைஞர்களை நாட்டுக்கு அழைத்து வர இராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் என்றார்.

# "ஐ.ம.ச. எம்.பிக்களுக்கு பிரச்சினை வரலாம்"

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(08) நடைபெற்ற இராஜதந்திர சிறப்புரிமை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேமவின் எம்.பி. பதவி தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பைச் சவாலுக்கு உட்படுத்தப் போவதில்லை. ஆனால், இதில் பிரச்சினையொன்று உள்ளது.

இலங்கை குடியுரிமை இல்லையென்றே அவரின் எம்.பி. பதவி இல்லாமல் போகின்றது. இங்கு எதிர்க்கட்சியிலுள்ள எம்.பிக்கள் பலரின் கட்சியைப் பதிவு செய்து கையெழுத்திட்டவர் அவரே. இதனால் ஐக்கிய மக்கள் சக்தி சட்டப்பூர்வமானதா? என்ற பிரச்சினைகள் எழும். அவரே கட்சியை இவர்களிடம் கொடுத்துள்ளார். அவர் அந்தக் கட்சியைப் பதிவு செய்யும் போது அவர் இலங்கை பிரஜையாக இல்லாமலே இருந்துள்ளார். இந்த நாட்டை சேர்ந்தவர் அல்லாத ஒருவருக்குக் கட்சியைப் பதிவு செய்ய முடியாது என்றார்.

அத்துடன், வேட்பு மனுவிலும் அவரா? கையெழுத்திட்டார் என்பதும் தெரியாது. அப்படி அவர் கையெழுத்திட்டிருந்தால் அது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டி வரலாம். எம்.பிக்கள் பலர் பாராளுமன்ற உணவகத்தில் கதைக்கும் போது மிகவும் குழப்பத்தில் இருப்பது போன்றே இருந்தது என்றார்.

இதன்போது எழுந்த ஐக்கிய மக்கள் சக்தி தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க கூறுகையில், கட்சி பதவிகள் ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டுள்ளது இதில் பிரச்சினைகள் கிடையாது என்றார்.

இதனைத் தொடர்ந்தும் மீண்டும் உரையாற்றிய அமைச்சர் கஞ்சன விஜேசேகர கூறுகையில், அப்படியில்லை, இப்படியில்லை என்று கூறினாலும் இது



நீதிமன்றம் செல்லும் பிரச்சினையாகும். நீதிமன்றத்தில் இது தொடர்பில் கூற வேண்டி வரும். வேட்பு மனுக்களில் யார் கையெழுத்திட்டது என்றும் பரிசோதிக்க வேண்டி வரும். இதனால் விவாதங்களுக்கு நேரத்தைச் செலவிடுவதை விடுத்து, இந்த விடயத்திற்கு முகங்கொடுப்பதற்குத் தயாராகுங்கள். உங்களுக்கு இந்த விடயத்தில் ஏதோவொரு பிரச்சினை உள்ளது. அவ்வாறு நடக்கக் கூடாது என்றே பிரார்த்திக்கின்றேன். எவ்வாறாயினும், பிரஜை அல்லாத ஒருவர் கட்சியை உருவாக்கியிருந்தால், அவர் அந்தக் கட்சியை உங்களிடம் கொடுத்திருந்தால், வேட்பு மனுவில் கையெழுத்திட்டிருந்தால், அவருக்கும் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கும் இடையே ஏதாவது உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டிருந்தால் பிரச்சினை இருக்கும்.

இப்போதே சிறந்த சட்டத்தரணி குழுவினரைத் தயாராக வைத்துக்கொள்ளுங்கள். எங்கள் பக்கத்தில் இருந்து வந்தவர்களைச் சட்டத்தரணிகளாக வைத்திருக்க வேண்டாம். அப்படிச் செய்தால் இன்னும் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிவரலாம் என்றார்.

# 13,347 மில்லியன் ரூபாய் நிலுவையில் உள்ளது

வேண்டியுள்ளதாக மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்ற வாய் மூல விடைக்கான வினா நேரத்தில் சுயாதீன எதிரணி எம்.பியான தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபை, தனியார் நிறுவனம், புகையிரத திணைக்களம், இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் ஆகிய நிறுவனங்கள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு நிலுவைத் தொகை செலுத்த வேண்டியுள்ளன.

மின்சார சபை 3,529 மில்லியன் ரூபாய், தனியார் நிறுவனம் ஒன்று 39 மில்லியன் ரூபாய், புகையிரத திணைக்களம் 2,544 மில்லியன் ரூபாய், இராணுவம் 3,149 மில்லியன் ரூபாய், விமானப்படை 4,011 மில்லியன் ரூபாய் மற்றும் பொலிஸ் 75 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் 13,347 ரூபாய் நிலுவைத் தொகை செலுத்த வேண்டியுள்ளது என்றார்.

# "ஒரு விமானம் கூட சொந்தமாக இல்லை"

உலகில் எம்மை விடச் செல்வந்த நாடுகள், குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளிலும் விமானச் சேவைகள் நஷ்டத்திலேயே இயங்குகின்றன. இந்திய எயார்லைன்சுக்கு என்ன நடந்தது? அதுவும் நஷ்டத்திலேயே இயங்குகிறது. சுவிஸ் எயார் தற்போது சேவையில் உள்ளதா? அதுவும் கிடையாது.

எமிரேட்ஸ் போன்ற விமானச் சேவைக்கு அந்த நாடுகள் 2 அல்லது 3 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை தொடர்ச்சியாக வழங்குகின்றன. இலங்கை போன்ற நாடுகளுக்கு அவ்வாறு செய்ய முடியாது. அதனால் எமது நாடு போன்ற சிறு அளவிலான விமானச் சேவைகளை நடத்தும் நிறுவனங்கள் பிரச்சினைகளை எதிர் நோக்கியே ஆக வேண்டும் என தெரிவித்தார்.

பன்றி இறைச்சி கறியை உட்கொண்ட

# இரு கைதிகள் மரணம்

பன்றி இறைச்சி கறியை உட்கொண்ட மகசின் சிறைக் கைதிகளில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொரு கைதி ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொரளை, தெஹிவளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவரே உயிரிழந்துள்ளதாகவும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றத்திற்காக இவர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என பொரளை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைதியின் வீட்டிலிருந்து பன்றி இறைச்சி கறியுடன்



சோறு பொதி கொண்டு வரப்பட்டுள்ளது.

இதை 15 கைதிகளுடன் சேர்த்து உட்கொண்டுள்ளனர். அதன் பின்னர் மூன்று கைதிகள் நோய்வாய்ப்பட்டு சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் இரண்டு கைதிகள் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# “கழிவுகளை அகற்ற கவனம் செலுத்தவும்”

## பிரதமரிடம் இம்தியாஸ் பாக்கீர் எம்.பி. வலியுறுத்தல்

பேருவளை நகரசபை பகுதியில் சேகரிக்கப்படும் கழிவுகளை அகற்றுவது தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு உடனடியாக கவனம் செலுத்தித் தீர்வை பெற்றுத்தருமாறு ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்ற பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தின் போதே இந்தக்கோரிக்கையை விடுத்த அவர் மேலும் பேசுகையில்,

இவ்விடயம் தொடர்பாக பிரதமரின் கவனத்திற்கு நான் கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் வைத்து கடிதமொன்றை வழங்கியதை அவர் நினைவில் வைத்திருப்பார் நான் நம்புகிறேன்.

பேருவளை நகரசபைக்குட்பட்ட பகுதியில் சேகரிக்கப்படும் கழிவுகள் பல வருட காலமாக பேருவளை,





மருதானை, வத்திமிராஜபுர கிராமத்தில் உள்ள காணியில் கொட்டப்பட்டு வருகிறது. இதனால், அப்பகுதியில் வாழுகின்ற 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன், இக்கிராமத்தை அண்மித்துள்ள மொரகல்ல சுற்றுலாப் பகுதியும் துர்நாற்றம் மற்றும் ஈக்கள் பெருக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

கடலுக்குச் செல்லும் கால்வாய் அடைபட்டுள்ளதோடு இதனால், சிறிய மழை பெய்தாலும், இந்த வீடுகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. கடும் துர்நாற்றம் வீசுவதால், வீடுகளில் வசிக்க முடியாத நிலையும் தற்போது ஏற்பட்டுள்ளது.

பேருவளை மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் இந்த கழிவுகள் அகற்றப்படும் விதத்தினால் இன்று பாரிய குப்பை மேடு உருவாகியுள்ளது. மீதொட்டமுல்லை குப்பை மேட்டில் நடந்ததைப் போன்று பாரிய உயிர்ச் சேதங்களுக்குப் பின்னர் பொறுப்பானவர்களின் கண்கள் திறக்கப் போகின்றனவா என்ற கேள்வியை வருத்தத்துடன் கேட்க வேண்டியுள்ளது.

சம்பந்தப்பட்ட துறைகளுக்குப் பொறுப்பான அனைத்துத் தரப்பினருக்கும் இது தொடர்பில் பொறுப்புள்ளது. குறிப்பாக, உள்ளூராட்சி மன்றம், சுகாதாரத் திணைக்களம், சுற்றாடலுக்குப் பொறுப்பான தரப்பினர் என அனைவருக்கும் இது தொடர்பில் பொறுப்பு உள்ளது.

பேருவளை, களுத்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் சுகாதாரத் துறைக்கான பொறுப்பு மாகாண சபைக்கு அன்றி, நேரடியாக மத்திய அரசிடமே உள்ளது.

களுத்தறை தேசிய சுகாதார அறிவியல் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தயவு செய்து சுகாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் உள்ளூராட்சி மன்றம் உட்பட அனைத்து தரப்பினரையும் விரைவில் அழைத்து, கலந்துரையாடி, இந்த குப்பை மேட்டை அகற்றுவதற்கும், கழிவுகளை அகற்றுவதற்கு நிலையான தீர்வை வழங்குவதற்கும், எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமரை நான் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.




# மருத்துவ மாதுக்கள் தின நிகழ்வுகள்

நூருல் ஹூதா உமர்

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் மருத்துவ மாதுக்களின் ஏற்பாட்டில் சர்வதேச மருத்துவ மாதுக்கள் தினம் திங்கட்கிழமை (06) கொண்டாடப்பட்டது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் எம்.எஸ்.எம்.பாயிஸ், வைத்தியர்கள், தாதிய மேற்பார்வையாளர்கள், தாதியர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் என பலரும் கலந்துக்கொண்டனர்.

# 2 புலமைப்பரிசில் திட்டங்கள் அறிமுகம்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய தற்போது வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டங்களுக்கு மேலதிகமாக, மேலும் இரண்டு புலமைப்பரிசில் திட்டங்களை ஜனாதிபதி நிதியம் ஆரம்பித்துள்ளது.

அதன்படி, பிரிவெனா மற்றும் பெண் பிக்குணி கற்றை நிறுவனங்களில் கற்கும் பிக்கு மற்றும் பிக்குணிகளுக்கும் ஏனைய மாணவர்களுக்கும், க.பொ.த உயர்தரத்தில் தகவல் தொழில்நுட்பம் கற்கும் மாணவர்களுக்குமான புதிய புலமைப் பரிசில் வேலைத்திட்டம் இம்மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியில் பெண் பிக்குணி கற்றை நிறுவனங்களுக்கும், ஏனைய மாணவர்களுக்கான 822 கற்கை நிறுவனங்கள் இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருப்பதோடு, இதற்காக மேற்படி கற்கை நிறுவனமொன்றுக்கு 06 புலமைப்பரிசில்கள் என்ற அடிப்படையில் நிறுவனத் தலைவர்களின் பரிந்துரைக்கமைய பயனாளிகள் தெரிவு செய்யப்படுவர்.

இரண்டு கட்டங்களாக வழங்கப்படும் இந்த புலமைப்பரிசில் பிரிவெனாக்களில் கற்கும் 5000 வறிய மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதோடு, முதல் கட்டத்தின் கீழ் 2024 மே மாதம் தொடக்கம் 12 மாதங்களுக்கு 3,000 ரூபாயும் இரண்டாம் கட்டத்தின் கீழ் 24 மாதங்களுக்கு 6,000 ரூபாயும் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விவரங்களையும் விண்ணப்பத்தையும் *presidentsfund.gov.lk* உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் *facebook.com/president.fund* உத்தியோகபூர்வ *Face Book* பக்கத்திலும் பெற முடியும்.



# உயிரிழந்த நிலையில் சிறுத்தை மீட்பு

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வனராஜா தோட்ட பகுதியில் காயங்களுடன் உயிரிழந்த நிலையில் சிறுத்தையொன்று புதன்கிழமை (08) மீட்கப்பட்டுள்ளது.

இரண்டு சிறுத்தைகளுக்கு இடையில் ஏற்பட்ட மோதலால் இந்த சிறுத்தையின் உடலில் காயங்கள் ஏற்பட்டு உயிரிழந்திருக்கலாம் என வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரதேசவாசிகள் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்ததையடுத்து, குறித்த சிறுத்தை மீட்கப்பட்டுள்ளது.


உயிரிழந்த சிறுத்தை நல்லத்தண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# மரத்திலிருந்து தவறி விழுந்தவர் மரணம்

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம்- புத்தூரில் உள்ள ஆலய சூழலில், மரம் வெட்டிக் கொண்டிருந்த ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை (07) இடம்பெற்றுள்ளது.

திருநெல்வேலி-கலாசாலை வீதியைச் சேர்ந்த பல்கலைக்கழக ஓய்வுபெற்ற உத்தியோகத்தரான 61 வயதுடைய முத்து சிவலிங்கம் என்பவரே இவ்வாறு



உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர், காயமடைந்த நிலையில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என தெரியவந்துள்ளது.

# செந்திலுடன் டக்ளஸ் கலந்துரையாடல்

ஏ.எச்.ஹஸ்பர்

மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில், எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படவுள்ள நீர்வள வளர்ப்புத் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்



உட்பட அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.




# நில ஆக்கிரமிப்பை எதிர்த்து போராட்டம்

பு.கஜிந்தன், நிதர்ஷன் வினோத்

மகாவலி அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பை நிறுத்தக் கோரி கொக்குத்தொடுவாய், கொக்குகுழாய் கருணாகேணி பிரதேச மக்களினால் புதன்கிழமை (08) காலை 10 மணியளவில் வட மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கவனயீர்ப்பு போராட்டமானது, வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு முன்னெடுக்கப்பட்டுள்ளது.



புதிய வீடுகள் நிர்மாணிப்பதற்கான

# அடிக்கல் நாட்டும் நிகழ்வு



எஸ்.கார்த்திகேசு

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் வீடின்றி வாழ்ந்து வந்த மூன்று குடும்பங்களுக்குக் காணியுடன் புதிய வீடுகள் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நட்டு வைக்கும் நிகழ்வு கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தலைமையில் திருக்கோவில் மண்டானை கிராமத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்றுள்ளது.

இப் புதிய வீடுகள் மற்றும் காணி என்பன திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் ஏற்பாட்டில் கனடா சீடர்ஸ் அமைப்பினரின் நிதிப் பங்களிப்புடன் தலா ஒரு வீட்டுக்கு 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான நிதியில் இப் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகத் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.நிருபா கிராம சேவை நிருவாக உத்தியோகத்தர் ஏ.கந்தசாமி கிராம சேவை உத்தியோகத்தர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

# “சட்டம் தன் கடமையைச் செய்துள்ளது”

## டயனாவுக்கு வழங்கிய தீர்ப்பு தொடர்பில் இராதா கருத்து

முன்னாள் அமைச்சர் டயனாகமகேவுக்கு கொடுக்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பின் மூலமாக சட்டம் தன் கடமையைச் செய்துள்ளதுடன் ஏனையவர்களுக்கும் ஒரு பாடமாக அமைந்துள்ளது.

இதுவரை காலமும் அவருக்கான செலவு செய்யப்பட்ட நிதிக்கு யார் பதில் கூறுவார்கள்? அல்லது பொறுப்பேற்பார்கள்? என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் புதன்கிழமை(08) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில்,

இந்த தீர்ப்பானது ஐக்கிய மக்கள் சக்தி கிடைத்த ஒரு வெற்றியாகவும் கருத முடியும்.ஏனெனில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரான முன்னாள் அமைச்சர் டயானா கமகே அந்த கட்சியின் கொள்கைக்கு எதிராக அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்ததுடன் அமைச்சுப் பதவியையும் ஏற்றுக் கொண்டார். இந்த தீர்ப்பின் மூலமாக ஐக்கிய மக்கள் சக்தி இழந்த ஒரு பாராளுமன்ற ஆசனத்தை மீண்டும் பெற்றுக் கொண்டுள்ளது. குறிப்பாக இதுவரை காலமும் இந்த வழக்கு என்ன நடக்கும் என பாரத்துக் கொண்டிருந்த பலருக்கு இந்த தீர்ப்பானது நீதிமன்றத்தின் நடுநிலைமையையும் அதன் தனித்துவத்தை நிரூபித்துள்ளது.

இரட்டை பிரஜா உரிமையைக் கொண்டவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்க முடியாது என்பதை நீதிமன்றம் மிகவும் தெளிவாக இந்த தீர்ப்பின் மூலமாகத் தெரிவித்துள்ளது. காலம் கடந்தாலும் சரியான நேரத்தில் இந்த தீர்ப்பு கிடைத்துள்ளது.

முன்னாள் அமைச்சர் டயனா கமகேவுக்கு அரசாங்கம் செலவு செய்த நிதியானது எங்களுடைய மக்களின் வரிப்பணமாகும். செலவு செய்யப்பட்ட அந்த பணத்திற்குப் பதில் கூறுபவர்கள் யார்? எங்களுடைய நாடு பொருளாதார ரீதியாகப் பின்னடைவைச் சந்தித்துள்ள இந்த காலப்பகுதியில் அன்றாடம் தங்களுடைய குடும்பங்களுக்கு உணவைப் பெற்றுக்கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலையில் இவ்வாறான பணம் வீணடிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

# எதிர்கால பயணத்துக்கு தடையாகும் வேலை நிறுத்தங்கள்

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் மற்றும் நிறைவேற்று தர அதிகாரிகள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தால் இந்த நாட்டில் பல்கலைக்கழக அமைப்பு தற்போது செயலிழந்துள்ளது.

கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளைக் களைதல், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும், பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் நிர்வாக தர அதிகாரிகளுக்கு இலவச வாகன அனுமதிச் சலுகை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இரு தரப்பினரும் இந்த தொடர் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர்.

நாட்டின் எதிர்கால அறிவுசார் சமூகத்தை உருவாக்கும் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் மற்றும் நிறைவேற்று தர அதிகாரிகள் சம்பள முரண்பாடுகளைக் களைந்து சம்பளத்தை அதிகரிக்கப் போராட வேண்டியுள்ளது.

இவ்விரு பிரச்சினைகளும் ஒரே நேரத்தில் எழுந்த விடயங்கள் அல்ல. இவை நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டவை. ஆனால், 'பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்' என, அதிகாரிகளிடம் கூறி, வீதியில் இறங்கி போராட்டம் நடத்தும் வரை, அந்த பிரச்சினைகளைக் கூர்ந்து கவனித்ததாகத் தெரியவில்லை.

இந்தப் பணிப்புறக்கணிப்பு காரணமாகப் பல்கலைக்கழகங்களில் கற்கைகள் மற்றும் பரீட்சைகளை முன்னெடுப்பதில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்திருந்தது. எனினும், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இணையத்தளத்தில் விரிவுரைகளை நடாத்துவதில் ஆர்வம் காட்டுகின்ற போதிலும், மாணவர்களை உடல் ரீதியாக இணைத்து விரிவுரைகளை நடாத்துவது போன்று அது வெற்றியடையவில்லை.

பல்கலைக் கழகங்களுக்குள் நுழையும் மாணவர்களின் இறுதி இலக்கு, தங்கள் படிப்பை நன்றாக முடித்து, தடையற்ற சூழலில் தேர்வில் தேர்ச்சி பெற்று, விரைவில் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேற வேண்டும். ஏனென்றால் வாழ்க்கைப் போரில் வெற்றி பெறுவதற்கான போராட்டம் அப்போதுதான் தொடங்குகிறது.

ஆனால் எப்படியிருந்தாலும், மாணவர்களின் போராட்டம், ஆசிரியர்களின் போராட்டம், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் நிர்வாகிகளின் போராட்டங்கள் பட்டப்படிப்பைத் தாமதப்படுத்தி சமூகத்தில் சேர்க்கின்றன. சில மாணவர்கள் அரசு வேலை பெறுவதற்கான வயது வரம்பு வரை பட்டம் பெற முடியாத நிலை உள்ளது.

இந்த விரக்தியானது நாட்டில் பெரும் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடியது என்பது எமது வரலாற்றில் இரத்தத்திலும் கண்ணீரிலும் எழுதப்பட்ட பாடம்.

பல்கலைக்கழக மாணவன் பட்டப்படிப்பை முடித்து விரைவாக வெளியேறுவதற்கு இந்த வேலைநிறுத்தங்கள் கடும் தடையாக இருப்பது போல், உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு வரலாம் என்ற நம்பிக்கையில் இருப்போருக்கும் ஏமாற்றம்தான்.

எனவே, பிரச்சினைகளைப் புத்திசாலித்தனமாக இனங்கண்டு அவை வெடிக்க விடாமல் சுமுகமான பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைப்பது அனைத்து தரப்பினரின் பொறுப்பாகும்.

கொடிய வைரஸ் பரவியதிலிருந்து, இந்த நாட்டில் பாடசாலை அமைப்பு மற்றும் பல்கலைக்கழக அமைப்பு கடுமையான குழப்பத்திற்குள் சென்றது. இன்று, ஒரு நாடு என்ற வகையில், அந்த நிலையிலிருந்து முழுமையாகத் தப்ப முடியவில்லை. எனவே, பல்கலைக்கழக மட்ட பிரச்சினைகளைத் தீர்க்க ஒவ்வொரு தரப்பினருக்கும் முன்வரவேண்டுமென வலியுறுத்துகிறோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ரணிலுடன் பசில் பேச்சுவார்த்தை என்ன நடந்தது?

**முருகானந்தம் தவம்**

முதலில் நடத்தப்பட வேண்டியது ஜனாதிபதித் தேர்தலா அல்லது பாராளுமன்றத் தேர்தலா என்பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் அவரை ஜனாதிபதியாக்கிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்குமிடையில் கயிறிழுப்பு நடந்து வரும் நிலையில் இதுதொடர்பில் ஜனாதிபதிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ஷவிற்குமிடையில் 5ஆவது தடவையாகவும் கடந்த சனிக்கிழமை நடந்த இரகசிய பேச்சு வார்த்தையும் இணக்கப்பாடு எதுவுமின்றி முடிவடைந்துள்ளது.

இருவருக்கும் இடையில் இதுவரையில் 5 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்றத்தைக் கலைத்து பாராளுமன்றத்திற்கான தேர்தலை நடத்துவது குறித்து இதன்போது சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ஷவினால் வலியுறுத்தப்பட்டிருந்தது.

எனினும், அரசியல் அமைப்பின் பிரகாரம் முதலில் ஜனாதிபதித் தேர்தல்தான் நடத்தப்படுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடாப்பிடியாக நிற்பதாலேயே பேச்சுக்கள் தோல்வியிலேயே முடிந்து வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த சனிக்கிழமை மாலை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் இருவருக்கும் இடையில் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வரும் நிலையில், இருவருக்கும் இடையில் ஐந்தாவது தடவையாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி ரணிலுக்கும் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் சமீப காலங்களில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் தொடர்பான விடயங்கள் இரகசியமாகப் பேணப்படும் நிலையில், இந்த சந்திப்பு தொடர்பான விடயங்களும் வெளிவரவில்லை.

முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படும் அந்த தேர்தலில் தான் போட்டியிடுவதா இல்லையா என்பது குறித்து ஜூலை மாதம் அறிவிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பசில் ராஜபக்ஷவுக்கு கூறியுள்ளதால் பொதுஜன பெரமுனவுக்குள் அப்படி ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடந்தால் பொதுஜன பெரமுன சார்பில் ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்துவதா? அவ்வாறானால் யாரை நிறுத்துவது? தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க போட்டியிட்டால் அவரை ஆதரிப்பதா? ரணில் விக்ரமசிங்க போட்டியிடும் பட்சத்தில் அவரை ஆதரிக்காது விட்டால் பொதுஜன பெரமுனவுக்குள் ஏற்படப்போகும் பிளவுகளை எப்படித் தடுப்பது என்பது தொடர்பில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, ஜனாதிபதி ரணிலுக்கும் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் சமீப காலங்களில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் தொடர்பான விடயங்கள் இரகசியமாகப் பேணப்படும் நிலையில், இருவருக்கும் இடையிலான கலந்துரையாடல்களை ராஜபக்ஷ குடும்பத்தினர் விரும்பவில்லையென உட்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருவருக்கும் இடையில் இடம்பெறும் கலந்துரையாடல்களின் மூலம் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதிக்கு உதவி செய்கின்றாரா என ராஜபக்ஷ குடும்பத்தினர் சந்தேகிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவாராயின் அது நாமல் ராஜபக்ஷவின் அரசியல் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைக் கருத்தில் கொண்டே இருவருக்குமிடையிலான சந்திப்புகளை அவர்கள் விரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ரணில் விக்ரமசிங்க தற்போது பொதுஜன பெரமுனவின் வாக்குப் பலத்திலேயே ஜனாதிபதியாகவுள்ளார். கடந்த பாராளுமன்றத்தேர்தலில் அவரது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அடைந்த வரலாற்றுத் தோல்வியினால் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஆதரவைப் பெற்று அல்லது பொதுஜன பெரமுன உட்பட ஏனைய கட்சிகளை உடைத்து அதிலுள்ளவர்களின் ஆதரவைப் பெற்று மீண்டும் ஜனாதிபதியாகவே ரணில் விக்ரமசிங்க காய் நகர்த்தி வருகின்றார்.

அதேவேளை, மக்களின் வெறுப்பிலிருந்து தங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக விடுவித்து வரும் ராஜபக்ஷக்கள் அதன் வெளிப்பாடாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் பொதுஜன பெரமுன பிளவுபடுத்தப்படுவதனை தடுப்பதற்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டுமென வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர். அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ஷ பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து வலியுறுத்தியதன் தொடர்ச்சியாக மகிந்த ராஜபக்ஷவும் அதை வலியுறுத்தினார்.

ராஜபக்ஷக்கள் பாராளுமன்றத் தேர்தலை முதலில் வைக்க வலியுறுத்துவதற்கு இன்னொரு பிரதான காரணமும் உள்ளது. அதாவது, ஒரு ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படும்போது, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் கட்சி அல்லது கட்சிகளின் கூட்டானது, பாராளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகமாகக் கொண்டிருக்கும். ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வெற்றி வாக்காளர்களைப் பொறுத்தவரை ஒரு முன் முடிவாக மாறும். இதனால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற தரப்பு அடுத்தடுத்த தேர்தல்களிலும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும்.

அதாவது, ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தினால் அதில் ரணில் விக்ரமசிங்கவோ, சஜித் பிரேமதாசவோ அநுரகுமார திஸாநாயக்காவோ யாராவது ஒருவர் வெற்றிபெற்று விட்டால் அதன் தொடர்ச்சியாக பாராளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களிலும் அவர்களின் கட்சியே வெற்றிபெறும். எனவே, ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வாக்காளர்களுக்கு முன் முடிவுகளாக அமையாத விதத்தில் முதலில் பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டுமென ராஜபக்ஷக்கள் விரும்புகின்றார்கள்.

இவ்வாறு முதலில் ஜனாதிபதித் தேர்தலா? அல்லது பாராளுமன்றத் தேர்தலா? என்பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் ராஜபக்ஷக்களுக்கும் இடையில் கயிறிழுத்தல் இடம்பெற்று வரும் நிலையில், பொதுஜன பெரமுனவுக்குள் ரணில் விக்ரமசிங்கவுக்கான ஆதரவுத் தளம் அதிகரித்து வருவதுடன், ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை பொது வேட்பாளராக அறிவித்து அவரை ஆதரிக்க வேண்டுமென்ற கலகக் குரல்களும் வெளிப்படையாகக் கேட்கத்தொடங்கியுள்ளன. இது பொதுஜன பெரமுன பிளவுபடுவதை உறுதிப்படுத்தியுள்ளது.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மூத்த, கனிஷ்ட உறுப்பினர்கள் வரை பலர் தற்போது ரணில் விக்ரமசிங்கவின் பக்கம் சாயத் தொடங்கியுள்ளனர் குறிப்பாக அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க,காஞ்சன விஜேசேகர,சுசில் பிரேமஜயந்த, பந்துல குணவர்தன நிமல் சிறிபால டி சில்வா, டக்ளஸ் தேவானந்தா, மஹிந்த அமரவீர, ஹரீன் பெர்னாண்டோ, ரமேஷ் பத்திரண, மனுஷ நாணாயக்கார, ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, ஷெஹான்சேமசிங்க, திலும் அமுனுகம, பிரமித்த பண்டார தென்னக்கோன்,அரவிந்தகுமார், சாமரசம்பத் தஸநாயக்க போன்றவர்கள் ரணிலுக்கான தமது ஆதரவை வெளிப்படையாகவே தெரிவித்து வருகின்றனர். அதுமட்டுமன்றி, பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட எம்.பிக்களான மஹிந்தானந்த அளுத்கமகே, எஸ்.பி.திசாநாயக்க, நிமல் லான்சா, பிரேம்நாத் சி தொலவத்த உள்ளிட்டவர்களும் ரணிலுக்கான ஆதரவைப் பகிரங்கமாகவே வெளிப்படுத்தி வருகின்றனர்.

இதேபோன்றே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கப் பல கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தயாராகவுள்ளதாக அறியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, உத்திர லங்கா கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சுதந்திர ஜனதா சபை உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பலர் இதில் அடங்குவர் என்றும் கூறப்படுகிறது.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக இவர்களில் ஒரு குழுவினர் இணைந்து கொள்ளவிருந்த போதிலும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக இதுவரை அறிவிக்கப்படாத காரணத்தினால் அவர்கள் மே தினத்தில் அவருடன் இணைந்து கொள்ளவில்லை.

எனினும், ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க பெயரிடப்பட்டவுடன் அரசியல் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் பலர் ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடைகளில் ஏறி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுக்கோப்பு, அர்ப்பணிப்பு, தியாகம், வீரத்துக்கு உலகப்புகழ் பெற்ற விடுதலைப் புலிகள் அமைப்புக்குள்ளேயே 'பேச்சுவார்த்தை' என்ற வடிவில் புகுந்து அவர்களைப் பிளவு படுத்தி, அவர்களின் அழிவுக்குப் பிள்ளையார் சுழி போட்டகுள்ள நரியான ரணில் விக்ரமசிங்கவுக்கு அரசியல் வாதிகளுக்குள்ளும் அரசியல் கட்சிகளுக்குள்ளும் பிளவுகளை ஏற்படுத்துவதென்பது மிகச் சிறிய விடயம் என்பதனால் தேர்தல் நெருங்கும் நேரத்தில் பொதுஜன பெரமுன உள்ளிட்ட பல கட்சிகள் பிளவடைவதனைக் காணக்கூடியதாகவே இருக்கும்.



## வாழ்வியல் தரிசனம்

என்றும் உவகையுடன் உலகில் வாழ்வது எப்படி எனக் கட்டாயம் அறிய வேண்டும். எப்பொழுதும் சிடுமூஞ்சியுடன் இருக்காதே என பலர் சொல்வதுண்டு. தங்களின் முகம் எப்படி மாறுகின்றது எதுவெனப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஒருவர், தனக்கு வேண்டியவர்களுக்குச் சொல்லும் வார்த்தைகளைப் புரியாமலே, சினம் கொள்ளும் நபர்கள் ஏராளம். கேட்கும் போது வார்த்தைகளின் அர்த்தம், பற்றி முழுமையாக அறியவேண்டும்.

கண்டதற்கும் ஐயப்படுவது அழகல்ல. உங்களுக்கு ஐயம் ஏற்பட கருத்துக் கூறினால், அது என்னவென்று சம்பந்தப்பட்டவர்களிடையே அமைதியாகக் கேட்டு அறிக.

எப்பொழுதும் எல்லோரும் எமக்கு வேண்டப்பட்டவர் எனும் நல் எண்ணத்தை மனதில் இருத்துக. ஒருவரிடம் உதவி கேட்கும் மனப்பான்மையுடன் பழகுவது அழகல்ல. ஒருவரிடம் நட்புப் பூணுவது சுய நலத்துடனானதாக இருக்கலாகாது.

அன்பு தேவையற்ற தவறான ஆராய்ச்சிகளை நிறுத்த வல்லது. பொய்மை இல்லாத பரந்த உணர்வு களிப்பு மிக்கது.

- பருத்தியூர் பால. வைரவநாதன்

## கடிதங்கள்

### குப்பைகளை அகற்றுங்கள்


ஹட்டன் நகர சபை ஊழியரினால் சூழல் மாசடைந்து வருவதாகக் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹட்டன் நகரில் நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக நகர சபை ஊழியர்களினால் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பொலித்தீன் குப்பைக்குக் குடியிருப்பு பகுதிகளில் தீ வைப்பதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த நகரில் பல பகுதிகளிலும் பாரிய அளவில் பொலித்தீன் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் குப்பைகள் குவிந்து கிடக்கின்றன

மேலும், நகர சபை முன் காணப்படுகின்ற குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குப்பைகளை தீ வைப்பதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

- செ.தி.பெருமாள்





# தனியார் நிலங்கள் அபகரிப்பா?



ஹஸ்பர் ஏ ஹலீம்

தனியார் நிலங்களை அபகரித்து மக்களின் குடியேற்றம் விவசாய பூமிகளை இல்லாமல் ஆக்கித் துரத்தியடிக்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்து நகர்ப் பகுதியில் விவசாய காணிகளை அபகரித்து அந்நிய நாடுகளுக்கு விற்க வேண்டாம் என கோரி கவனயீர்ப்பு போராட்டம் 28.04.2024 அன்று இடம்பெற்றது.

1972ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில் அப்போதைய பிரதியமைச்சராக செயற்பட்ட மறைந்த மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீத் அவர்களால் முத்து நகர்ப் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டது.

1984இல் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது, துறைமுக அமைச்சராக இருந்த லலித் அதுலத் முதலியால் குறித்த முத்துநகர் காணி துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமானது என வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது. ஆனால், அம்மக்களுக்கு இது வரை காணி உரித்துப் பத்திரம் வழங்கப்படவில்லை எனவும் துறை முக அதிகார சபையினர் தங்களைத் தொடர்ந்தும் அச்சுறுத்துவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

1972ஆம் ஆண்டிலிருந்து நெற்செய்கை உள்ளிட்ட மேட்டு நிலப் பயிர்ச் செய்கை விவசாயங்களை மேற்கொண்டிருந்து தற்போது வரை விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். தற்போது இங்கு மூன்று விவசாய குளங்கள் காணப்படுகிறது சுமார் 788 ஏக்கர் விவசாய நிலங்களும் காணப்படுகிறது 300க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் தங்களின் அன்றாட ஜீவனோபாயமாக விவசாயத்தை நம்பியே வாழ்கின்றனர் .

துறைமுக அதிகார சபையினர் எங்கள் காணியைப் பெற்று இந்தியாவுக்குத் தாரை வார்க்கப் பார்க்கின்றனர் இதனை அரசாங்கம் நிறுத்தி ஜனாதிபதி எங்களுக்கான காணிகளுக்கான உரித்து படிவங்களை வழங்க வேண்டும் விவசாய குளங்கள் புனரமைக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.



"விற்காதே விற்காதே காணிகளை விற்காதே","விவசாய நிலங்களை மீட்டுத் தா" ,"நாட்டின் புதுகெழும்பு விவசாயம்", "துறைமுக அதிகார சபையே விவசாய காணிகளை அபகரிக்காதே", "1972இல் இருந்து விவசாய அநாதைகளாக நிர்க்கதியாக இருக்கிறோம்", "காணி உரித்து வடிவங்களை வழங்கு" போன்ற வாசகங்களை உள்ளடக்கிய வகையில் பதாகைகளை ஏந்தியவாறு குறித்த முத்து நகர் விவசாய பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்படியாக மக்களின் விவசாய பூமிகள் துறைமுக அதிகார சபையினரால் பறிக்கப்பட்டு இந்தியாவுக்கு நீண்டகால குத்தகைக்காக வழங்கப்படவுள்ளதாக அறிந்து மக்கள் போராட்டம் வெடிக்கத் தொடங்கியுள்ளது.

இப் பகுதியில் தகரவெட்டுவான் விவசாய குளம் இருந்த போதிலும், அதனை கமநல அபிவிருத்தி திணைக்களம் ஊடாக குளம் புனரமைப்பு செய்யப்படவிருந்த போதிலும் இலங்கை துறை முக அதிகார சபையினர் அதனைத் தடுத்து நிறுத்தினர். இதனால் பல ஏக்கர் வயல் நிலங்கள் செய்கை பண்ண முடியாது பல இடர்களை அப் பகுதி விவசாயிகள் எதிர் கொண்டனர்.


இது தொடர்பில் அப் பகுதி குடும்ப பெண்ணொருவர் இவ்வாறு தெரிவித்தார். "இலங்கை துறைமுக அதிகார சபையினர் கடந்த மூன்று வருடகாலமாக எங்களது விவசாய குடியிருப்பு காணிகளுக்குள் புகுந்து எந்த வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது அச்சுறுத்துகின்றனர். புதிய கட்டிடங்களோ விவசாய செய்கையின்போது, உழுதுதல் நடவடிக்கையோ எதுவுமே செய்ய விடாது தடுத்து நிறுத்துகின்றனர். 2010, 2013 மற்றும் 2023களில் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான நிதி தகரவெட்டுவான் குள அபிவிருத்திக்காக வந்த போது குறித்த திட்டத்தைச் செய்ய விடாது துறைமுக அதிகார சபையினர் தடுத்து நிறுத்தினர், இதனால் விவசாயிகளாகிய நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம், எங்களது காணி எங்களுக்கு வேண்டும்" என்றார்.

மக்கள் காணிகளை சூறையாடி உள்ளக வளங்களை அந்நிய சக்திகளுக்குக் கொடுப்பதனால் அப் பகுதி குடியேற்றங்கள் பாதிக்கப்படக்கூடும் அப் பகுதி மக்களைத் துரத்துவதாக இருந்தால் அதை விடவும் சாதகமான காணிகள் விவசாய நிலங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும்.


"துறைமுக அதிகார சபையினர் இங்கு வந்து அடிக்கடி அச்சுறுத்துகின்றனர். இதற்கு நாங்கள் அச்சப்படப் போவதில்லை, எங்கள் உரிமைகளைப் பெற்றுத் தாருங்கள்" என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

வட கிழக்கு மாகாணங்களில் நில அபகரிப்பு என்ற நிலையில், அதிகமாகச் சிறுபான்மை சமூகமே பாதிக்கப்பட்டுள்ளனர். அரசுடன் இருக்கும் அரசியல் கட்சிகள் மக்கள் பிரதிநிதிகள் உட்பட எதிர்க்கட்சி பிரதிநிதிகள் மக்களின் காணி உரிமைகள் தொடர்பில், தொடர்ந்தும் குரல் கொடுக்க வேண்டும், நிம்மதியாகச் சுதந்திரமாக வாழ வழியமைத்துக் கொடுக்கவேண்டும், தேர்தல் காலங்களில் மாத்திரம் கிராம மக்களைச் சந்திப்பதன்று அடிக்கடியாக மக்கள் பிரச்சினைகளை ஆராய்ந்து பாராளுமன்றில் பேசுவதுடன், நிரந்தர தீர்வொன்னை பெற முயற்சிக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகக் காணப்படுகிறது.





# கண்ணுக்குத் தெரியா காற்றலை!



ஷெல்லிதாசன்

"அம்மா உங்கடை குடும்ப பதிவு அட்டையை தாங்கோ..." "இந்தாங்கோ ஜீ.எஸ் ஐயா..." தனக்கு முன்னால் அந்தரப்பட்டு கதிரையில் அமர்ந்திருந்த சிவரமணி அம்மாவிடமிருந்து குடும்ப அட்டையை பெற்றுக்கொண்ட கிராமசேவையாளர் சுந்தரமூர்த்தி, ஒரு படிவத்தை எடுத்து விபரத்தைப் பார்த்து பதிந்து கொண்டிருந்தார்.

இருந்தாற்போல ஒரு யோசனை வந்தவராய் "அம்மா உங்கடை கணவரின்ரை பெயர் சிவசுப்பிமணியந்தானே..." "ஓமையா அவர் மோசம் போய் மூண்டு வருசமாச்சு.." "அது சரி அவர் அரசாங்க உத்தியோகத்திலை இருந்தவரெல்லே... அவரின் பென்சன் வருமெல்லே" ஓம் ஐயா.. அது எங்கை ஐயா இப்பத்தைய சிலவுக்கு காணும்?" "ஓம் அம்மா நீங்கள் சொல்லுறது சரிதான்...ஆனால், மன்னிச்சுக் கொள்ளுங்கோ அரச பென்சன் கிடைக்கிற குடும்பங்களுக்கு கொரோனா வாழ்வாதார நிதி 5,000 கொடுக்க முடியாது. இது அரசாங்க உத்தரவு.

அதை மீறி என்னாலை ஒண்டும் செய்ய ஏலாதம்மா. இந்தாங்கோ குடும்ப பதிவு அட்டை. "போட்டு வாங்கோ" என்று சொன்ன சுந்தரமூர்த்தி ஜீ.எஸ்சைப் பார்த்து ஐயா பென்சன் பேருக்குத்தான் வருகுதையா... மூத்தவளின்ரை கலியாணத்துக்கு வங்கியிலை... ஐஞ்சு லச்சம் கடன் எடுத்தனான்... அதுக்கு வெட்டி கையிலை மூவாயிரந்தான் கிடைக்குது... அதை வைச்சு எப்படி ஐயா காலந்தள்ளுறது...

என்ரை ரண்டாவது மகன் இடைக்கிடை மேசன் வேலைக்குப் போனவன்... அதுவும் இப்ப இந்த ஊருக்கு ஊர் தடையாலை எல்லாம் போச்சு... ஜீ.எஸ். ஐயா உங்களுக்கு புண்ணியம் கிடைக்கும் எனக்கு நிவாரணம் கிடைக்க உதவி செய்யுங்கோ, என சிவரமணி அம்மா அழாத குறையாக கெஞ்சிக் கேட்க ஜீ.எஸ். எதற்கும் இணங்காதவராய் இருப்பதை அவதானித்த ரமணி அம்மா தனது கண்களிலிருந்து வழிந்த கண்ணீரை தனது சேலைத் தலைப்பால் துடைத்தபடி அவ்விடத்தை விட்டு அகன்றாள் அன்று மாலை தனக்கு நிவாரண நிதி கிடைக்காத கவலையில் தனது வீட்டு முன் விறாந்தையில் கீழே குந்தியிருந்து யோசித்தபடியிருந்தாள் சிவரமணி அம்மா.

திடீரென அவளது வீட்டின் முன்னால் ஒரு உந்துருளி வந்து நிற்பதைப் பார்த்து எழுந்து அதனை அவதானிப்பதற்கு முன்பாக வந்து நின்ற உந்துருளியிலிருந்து இறங்கிய ஒரு இளைஞன் தூக்கமுடியாத ஒரு பெரும் பொதியை ரமணி அம்மா நிற்குமிடத்திற்கு கொண்டுவந்து வைத்துவிட்டு "அம்மா இதெல்லாம் உங்களுக்குத்தான் அம்மா... இதுக்குள்ளை அரிசி பருப்பு சீனியெண்டு ஐயாயிரம் ரூபா பெறுமதியான சாமானுகள் இருக்கு... அதோடை இந்த ஐயாயிரம் ரூபா காசையும் வைச்சுக்கொள்ளுங்கோ..." என சொன்ன இளைஞன் சிவரமணி அம்மாவிடம் ஐயாயிரம் ரூபா காசையும் கொடுத்தான்.

ரமணி அம்மாவுக்கு தான் ஏதோ கனவு காண்பது போல பிரமை ஏற்பட்டது. "தம்பி ஆரடா தம்பி நீ... உனக்கு அந்த கோணேசருடைய அருள் கிடைக்கவேணும்... உதவி எண்டது தருணத்திலை செய்யிறதுதான் தம்பி உதவி" என சொன்ன ரமணி அம்மா தன் முன்னால் நின்ற இளைஞனைப்பார்த்து கையெடுத்து கும்பிட்டாள்.

"ஐயையோ என்னை ஏனம்மா கும்பிடிறியள்...இதையெல்லாம் ஒரு பெரியவர்தான் உங்களிட்டை குடுக்கச் சொன்னவர். அவருக்குத்தான் நீங்கள் நன்றி சொல்லவேணும்" என சொன்ன அந்த இளைஞன் தான் ரமணி அம்மாவிடம் ஒப்படைத்த பொருட்கள் பணத்துடன ரமணி அம்மாவைச் சேர்த்து தான் கொண்டு வந்த கைத்தொலைபேசியில் இரண்டு மூன்று படங்களை எடுத்து பதிவு செய்துகொண்டு விடைபெற்றுச் சென்றான்.

அப்படி அகன்று சென்ற இளைஞன் தன்னிடம் பொருட்களை ஒப்படைக்கச் சொன்ன பெரியவரை அணுகி "இந்தாங்கோ ஐயா உங்கடை தொலை பேசி. நீங்கள் சொன்னமாதிரி அந்த அம்மாவையும் காசு பொருட்களையும் சேர்த்து அழகா படம் எடுத்திருக்கிறன் பாருங்கோ" என தான் எடுத்த படங்களை அவரிடம் காட்டினான். அவற்றை பார்த்து மகிழ்ந்த அந்தப் பெரியவர், தான் பார்த்த படங்களின் மேல் தனது சுண்டு விரல்களால் மெல்ல அழுத்தினார்.


அழுத்தியதும் டிலீற் செயர்ஸ் எடிற் என்ற வாசகங்கள் முன்னால் குதித்து விழுந்தன. அதைப் பார்த்த பெரியவரின் விரல் டிலீற் என்ற பதத்தை அழுத்த, இளைஞன் பதிவு செய்த படங்கள் அத்தனையும் மாயமாக மறைந்தன.

இதை அவதானித்த அவ்விளைஞன் "என்னையா இப்படி செய்து போட்டியள். இனி எப்படி பேஸ் புக்கிலை படங்களை போடப் போறியள்.? "தம்பி நானுன்னை படம் பிடிச்சு வரச்சொன்னது பேஸ் புக்கிலை அதையெல்லாம் போட்டு என்ரை பெருங் கொடையை பறைசாற்ற இல்லைத் தம்பி...
எனக்கு ஒரு மன ஆறுதலுக்காகத்தான்.
தம்பி படமெடுக்கச் சொன்னனான்.
வலது கை கொடுத்ததை
இடது கை அறிஞ்சாலே நாம் கொடுத்ததின்ரை பலனே அற்றுப் போகுமடா" என மிக சாதாரணமாக சொன்ன ஜீ.எஸ்.சுந்தரமூர்த்தியைப் பார்த்து அதிசயித்த அந்த இளைஞன் "ஒரு அங்கர் பெட்டியை கொடுத்துவிட்டே பேஸ் புக்கிலை போட்டு அசத்தும் இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு மனிதரா" என வியந்தபடி தனது உந்துருளியை உயிர்ப்பித்து பறந்துசென்றான் அவன்...

கேரளா

‘வெஸ்ட் நைல்’ காய்ச்சல்

# பரவலால் பரபரப்பு




கேரளாவில் சில மாவட்டங்களில் ‘வெஸ்ட் நைல்’ காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளதால், பாதிப்பு உள்ளவர்கள் மருத்துவமனையை நாடுமாறு கேரளா மாநில சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், அனைத்து மக்களிடையேயும் நோய் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மாநில சுகாதாரத்துறை திட்டமிட்டுள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், “வெஸ்ட் நைல் காய்ச்சல் பரவுவதால் மக்கள் அச்சப்பட வேண்டாம். காய்ச்சல் அல்லது நோய் தொற்றின் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக மருத்துவரிடம் சென்று சிகிச்சைப் பெற வேண்டும். இந்த பாதிப்பில் காய்ச்சல், தலைவலி, நினைவாற்றல் இழப்பு, தசைவலி உள்ளிட்ட பெரும் பாதிப்புகள் உண்டாகக்கூடும்/ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இதுவரை பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோருக்கு நோய்களுக்கான அறிகுறிகள் தென்படவில்லை. இந்த தொற்றால் இறப்பு விகிதம் ஒப்பிட்டளவில் குறைவு தான் என்றாலும் இதற்கான தடுப்பூசி அல்லது தடுப்பு மருந்து என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பதால், சுகாதாரம் என்பதே முக்கியமான ஒன்றாக உள்ளது. மக்களும் தங்கள் சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கியூலெக்ஸ் என்ற நுளம்பு வகை மூலம் பரப்பப்படும் இந்த காய்ச்சல், 1937ஆம் ஆண்டு உகாண்டாவில் கண்டறியப்பட்டது. ஆனால் கடந்த 2011ஆம் ஆண்டு தான் கேரளாவில் கண்டறியப்பட்ட நிலையில், 2019இல் மலப்புரத்தைச் சேர்ந்த சிறுவன் இந்நோய்த்தொற்றால் உயிரிழந்தான்.

இதனைத் தொடர்ந்து 2022இல் திருச்சூர் மாவட்டத்தில் 47 வயதுமிக்க ஒருவர் மரணமடைந்தார் என்பதால் கேரள அரசு இந்த காய்ச்சல் பரவ தொடங்கியதை உறுதி செய்ததும் தீவிரமாக தடுப்பு நடவடிக்கையில் களம் கண்டுள்ளது.

கீவ்

ஜெலன்ஸ்கியை படுகொலை செய்ய

# சதி திட்டம்

## உக்ரைன் உயரதிகாரிகள் கைது



உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் 2 ஆண்டுகளுக்கு முன் ரஷ்யா படையெடுத்தது. உக்ரைனின் கீவ், கார்கிவ், ஒடிசா, மரியுபோல் மற்றும் டோனெட்ஸ்க் உள்ளிட்ட பல நகரங்களைப் போர் தொடக்கத்தில் ரஷ்யா கைப்பற்றியது. ஆனால், அந்நகரங்களை உக்ரைன் மீண்டும் தன்வசப்படுத்திக் கொண்டது.

இந்நிலையில், சி.என்.என். செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை படுகொலை செய்வதற்கு சதித் திட்டம் தீட்டிய விடயத்தில் உக்ரைனின் 2 பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

உக்ரைன் அரசின் பாதுகாப்பு பிரிவில் அங்கம் வகிக்கும் கேர்னல்கள் 2 பேர், பணம் பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக, உக்ரைனுக்கு எதிரான இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டிற்காக அவர்கள் கைது செய்யப்பட்டனர். இருவரில் ஒருவர் பயங்கரவாத செயலுக்குத் தயாரான குற்றச்சாட்டும் உள்ளது. இருவர் மீதும் தேசத் துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா

மன உளைச்சலால் உணவு அதிகரிப்பு:

# இளைஞர் பரிதாப மரணம்




மன உளைச்சலால் அதிக உணவை எடுத்துக்கொண்டு உடல் பருமனான இளைஞர், தன் இளம் வயதில் இறந்த செய்தி சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொதுவாக உடற் பருமன் என்பது மரபணு ரீதியாக அடுத்த தலைமுறையைத் தாக்கும் ஒரு வகை பிரச்சினை. ஆனால், தற்பொழுது வாழ்க்கை முறை மற்றும் உணவு பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் வளரும் குழந்தைகள் மற்றும் இளம் தலைமுறையினரிடம் அதிகமாக இப்பிரச்சினை காணப்படுகிறது.

சேலம்

# தொழிலதிபரை வீட்டுக்கு அழைத்த பெண்ணால் விபரீதம்



சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பிரபல தொழிலதிபருக்கும் பெண் ஒருவருக்கும் முகநூல் மூலம் ஏற்பட்ட நட்பு திருமணத்தை மீறிய உறவாக மாறியுள்ளது.

இந்நிலையில், கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி ஆசைவார்த்தை கூறிய அந்த பெண், தனது வீட்டிற்கு தொழிலதிபரை வரவழைத்துள்ளார். அப்போது, 4 பேர் திடீரென்று வீட்டுக்குள் புகுந்துள்ளனர். அந்த பெண்ணும் நால்வரும் சேர்ந்து தொழிலதிபரை மிரட்டி, அவரது உடைமைகளை பறித்துள்ளனர்.

பின்னர், அவரை காரில் கடத்திச் சென்று, காசோலையில் 10 இலட்ச ரூபாய் எழுதி வாங்கியுள்ளனர்.

பின்னர், அந்தப் பணத்தை கடத்தல் கும்பல் வங்கியில் மாற்றச்சென்ற நேரத்தில், நடந்ததை தன்னிடம் வேலை செய்யும் நபரிடம் தொழிலதிபர் தெரிவித்துள்ளார். உடனே, அவர் பொலிஸூக்கு புகார் தெரிவித்தார். ஸ்தலத்துக்கு விரைந்த விரைந்துச் சென்ற பொலிஸார், குறித்த கும்பலை கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மத்தியப்பிரதேசம்

பேருந்து திடீரென தீப்பிடித்து எரிந்ததில்

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேதம்




பாராளுமன்ற மக்களவைத் தேர்தல் நாடு முழுவதும் நடைபெற்று வருகின்ற சூழலில், மத்தியப்பிரதேச மாநிலம் பெதுல் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட முல்டாய் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கவுலா கிராமத்தில் திங்கட்கிழமை(06) வாக்குப்பதிவு நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, வாக்குப்பதிவு முடிந்த பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்குச்சாவடி பணியாளர்களை ஏற்றிக்கொண்டு செவ்வாய்க்கிழமை (07), பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. அப்போது யாரும் எதிர்பாராத விதமாக பேருந்து திடீரென தீப்பிடித்து எரிந்தது.

அச்சமயம் வாக்குச்சாவடி ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் பேருந்தில் இருந்து குதித்து உயிர் தப்பினர். இருப்பினும் இந்தத் தீ விபத்தில் நான்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் அவற்றின் பாகங்கள் சேதமடைந்தன.

மேலும் இந்தச் சம்பவம் குறித்து பெதுல் மாவட்ட ஆட்சியர் நரேந்திர குமார் சூர்யவன்ஷி கூறுகையில், “இந்தச் சம்பவம் குறித்துத் தேர்தல் ஆணையத்திற்கு அறிக்கை அனுப்பியுள்ளோம். அங்கிருந்து வரும் உத்தரவுக்குப் பின் அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்போம். வாக்குச்சாவடி பணியாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர். அவர்கள் வாக்குச்சாவடி பொருட்களை ஒப்படைத்துள்ளனர். இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்களின் கருத்துப்படி இது இயந்திரக் கோளாறு என முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது” என தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல்



# ராஜஸ்தானை வென்றது டெல்லி

இந்தியன் பிரீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), டெல்லியில் செவ்வாய்க்கிழமை (07) இரவு நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் உடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தானின் அணித்தலைவர் சஞ்சு சாம்சன், தமதணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், ஜேக் பிறேஸர்-மக்குர்க்கின் 50 (20) ஓட்டங்களின் மூலம் அதிரடியான ஆரம்பத்தைப் பெற்ற டெல்லி, இரவிச்சந்திரன் அஷ்வினிடம் இழந்ததோடு, அடுத்து வந்த ஷே ஹோப்பும் அடுத்த ஓவரிலேயே ரண் அவுட்டானார்.

பின்னர் அபிஷேக் பொரேல் அதிரடியாக ஓட்டங்களைப் பெற்ற நிலையில், அஷ்வினிடம் அக்ஸர் வீழ்ந்ததோடு, 65 (36) ஓட்டங்களுடன் பொரேலும் அஷ்வினிடம் வீழ்ந்தார். அடுத்து வந்த அணித்தலைவர் றிஷப் பண்ட் யுஸ்வேந்திர சஹாலிடம் வீழ்ந்தபோதும், ட்ரிஸ்டான் ஸ்டப்ஸின் அதிரடியான 41 (20) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 221 ஓட்டங்களை டெல்லி பெற்றது.

பதிலுக்கு 222 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான், ஆரம்பத்திலேயே கலீல் அஹ்மட்டிடம் யஷஸ்வி ஜைஸ்வாலை இழந்தது. அடுத்து வந்த சாம்சன் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய நிலையில், சஹலுக்குப் பதிலாக தாக்கம் செலுத்தும் மாற்றுவீரராகக் களமிறங்கிய ஜொஸ் பட்லர் அக்ஸரிடம் வீழ்ந்தார். தொடர்ந்து வந்த ரியான் பராக் 27 (22) ஓட்டங்களுடன் பொரேலுக்குப் பதிலாக மாற்றுவீரராகக் களமிறங்கிய ரசிக் சலாமிடம் வீழ்ந்தார்.

பின்னர் அடுத்தடுத்த ஓவர்களில் சாம்சன் 86 (46), ஷுபம் டுபே 25 (12) ஓட்டங்களோடு முகேஷ் குமார், கலீல் அஹ்மட்டிடம் வீழ்ந்தனர். அடுத்து வந்த டொனோவன் பெரைரா, இரவிச்சந்திரன் அஷ்வின் ஆகியோர் குல்தீப் யாதவ்விடம் வீழ்ந்ததோடு, றொவ்மன் பவல் முகேஷ் குமாரிடம் விழ 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 201 ஓட்டங்களையே பெற்ற ராஜஸ்தான் 201 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியின் நாயகனாக குல்தீப் தெரிவானார்.

இந்நிலையில் தரம்சாலாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவை பஞ்சாப் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.




சிம்பாப்வேக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய பங்களாதேஷ்

சிம்பாப்வேக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் ஏற்கெனவே வென்றிருந்த பங்களாதேஷ், சட்டோகிராமில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் இரண்டு போட்டிகள் இருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

பங்களாதேஷ்: 165/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: தௌஹிட் ஹிரிடோய் 57 (38), ஜாகிர் அலி 44 (34) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிளஸிங்க் முஸர்பனி 3/14 [4])

சிம்பாப்வே: 156/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: பராஸ் அக்ரம் ஆ.இ 34 (19), டடிவனஷே மருமனி 31 (26), ஜொனதன் கம்பெல் 21 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: மகமதுல்லா 1/1 [1], தஸ்கின் அஹ்மட் 1/21 [4], தன்வீர் இஸ்லாம் 1/26 [4], தன்ஸிம் ஹஸன் சகிப் 1/26 [4])

போட்டியின் நாயகன்: தௌஹிட் ஹிரிடோய்



# கரப்பந்தாட்ட பயிற்சி மத்திய நிலையம்

ஆ.ரமேஸ்.

நுவரெலியா-வலப்பனை பிரதேசத்திற்கு உட்பட்ட உடப்புஸ்ஸல்லாவ டலோஸ் தோட்டத்தில், கரப்பந்தாட்ட பயிற்சி மத்திய நிலையம் புதன்கிழமை (08) காலை திறந்து வைக்கப்பட்டது.

மத்திய மாகாணத்தில் பிரசித்தி பெற்ற சிறந்த கரப்பந்தாட்ட வீரரான அமரர். நாகலிங்கம் கமலேஸ்வரனின் ஞாபகார்த்தமாக “கமலேஸ் கரப்பந்தாட்ட மத்திய பயிற்சி நிலையம்” என இந்த நிலையத்துக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அமரர் நா.கமலேஸ்வரனின் புதல்வர் கமலேஸ்வரன் கணிஷ்நுவான் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தேசிய கரப்பந்தாட்ட முன்னாள் தலைவர் எஸ்.சி.ஏக்கநாயக்க,வலப்பனை பிரதேச விளையாட்டு துறை அதிகாரி சாயா மதுவந்தி,

நுவரெலியா மாவட்ட கரப்பந்தாட்ட வீரர்களின் மூத்த பயிற்றுவிப்பாளர் குலஸ்ரீ சமரசிங்க, ஏபர்நெட் லங்கா ஆடை தொழிற்சாலை முகாமையாளர் சுதத் நாகஸ்தன்ன உள்ளிட்ட அதிபர்கள், அரசியல் பிரமுகர்கள், வர்த்தகர்கள் தோட்ட பொது மக்கள், கரப்பந்தாட்ட வீரர், வீராங்கனைகள் என பலரும் கலந்துகொண்டனர்.




# பிக்ஃபோர்ட், ரம்ஸ்டேலை இலக்கு வைக்கும் செல்சி?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான எவெர்ற்றனின் கோல் காப்பாளர் ஜோர்டான் பிக்ஃபோர்ட், இன்னொரு பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலின் கோல் காப்பாளர் ஆரோன் ரம்ஸ்டேலைக் கைச்சாத்திட பிறிதொரு பிறீமியர் லீக் கழகமான செல்சி எதிர்பார்த்துள்ளதாகக் கூறப்படுகிறது.

எவெர்ற்றனுடன் இன்னும் மூன்றாண்டு ஒப்பந்தத்தை பிக்ஃபோர்ட் கொண்டுள்ள நிலையில், ஆர்சனலுடன் இன்னும் இரண்டாண்டு ஒப்பந்தத்தை ரம்ஸ்டேல் கொண்டுள்ளார்.

பிறீமியர் லீக் கழகமான பிறெண்ஃபோர்ட்டிலிருந்து டேவிட் ரயாவை நிரந்தரமாகக் கைச்சாத்திட்ட பின்னர் ரம்ஸ்டேலை வெளியேற ஆர்சனல் அனுமதிக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற போதும், பிக்ஃபோர்ட்டுக்கு அதிக விலையை எவெர்ற்றன் கோருமென எதிர்பார்க்கப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 09 மே 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.